## அவசரநிலைப் பிரகடனத்தின் 50 வது ஆண்டு!

# புதிய வடிவத்தில் வலுவடைந்த எதேச்சதிகாரம்!

## ‘பீப்பிள்ஸ் டெமாக்ரசி’ தலையங்கம்!

**1975** ஜூன் 25 அன்று நள்ளிரவில் உள் நாட்டு அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டது; அதன்பின் நடை பெற்ற நிகழ்வுகளை நினைவுகூர்வது தற்போது அசாதா ரணமாகத் தோன்றலாம். எனினும், ‘வரலாற்றின் படிப்பினைகளை மறக்க முனைபவர்கள் அவற்றை மீண்டும் செய்யக்கூடிய விதத்தில் கண்டனத்திற்குள்ளாவார்கள்’ என்ற பொருள் பொதிந்த வார்த்தைகளை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

**அரசியல் அந்தஸ்தை உயர்த்திக் கொண்ட இந்திரா காந்தி**

1960களின் பிற்பகுதியில் காங்கிரஸ் கட்சியின் அதிகார ஏகபோகத்திற்கு ஓர் அடி விழுந்தது.

எதிர்க் கட்சிகள் பல மாநிலங்களில் வெற்றிகளைப் பெற்றன. இதனை எதிர்கொள்வதற்காக இந்திரா காந்தி, “வறுமையே வெளியேறு” (“Garibi Hatao”), வங்கிகள் தேசியமயம் மற்றும் மன்னர் மானியம் ஒழிப்பு போன்ற முற்போக்கான நடவடிக்கைகள் மற்றும் முழக்கங்கள் மூலம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். அதே வேளையில், காலங்காலமாகக் கடைப்பிடித்துவந்த அரசியல் நடைமுறைகளைக் கைவிட்டுவிட்டு, வலு வான மாநில அளவிலான தலைவர்களை ஓரங்கட்டி விட்டு, அடிமட்ட மக்களுக்கு நேரடியாக அறைகூவல் விடுத்தார். இந்த அணுகுமுறை இந்திரா காந்திக்கு சில ஆதா யங்களை அளித்தது. எனினும், வங்கதேச விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதில் இந்தியாவின் தலையீடு தான், அரசியல் மேலாதிக்கத்திற்கான அவரது முயற்சியை உண்மையிலேயே வலுப்படுத்தியது. இறுதியில் சுதந்திர வங்கதேசம் நிறுவப்பட்டதும், பாகிஸ்தானின் தீர்க்கமான தோல்வியும் அவரது அந்தஸ்தை கணிச மாக உயர்த்தியது. பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியை மீட்பதை நோக்கமாகக் கொண்ட அமெ ரிக்காவின் தலையீட்டைத் தடுப்பதில் சோவியத் யூனியன் முக்கியமான பங்களிப்பைச் செய்தது. இது இந்திரா காந்தியின் அந்தஸ்தை வலுப் படுத்தியது.

1971 பொதுத் தேர்தல்களில் அவரது வெற்றியை உறுதி செய்தது. எனினும், இந்த ஒட்டு மொத்த சித்தி ரம், மேற்கு வங்க சட்டமன்றத்தில் தனிப் பெரும் கட்சி யாக உருவெடுத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யைத் தடுக்க முடியவில்லை. ஆனாலும், அது இயல் பாக முன்னேறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. 1972 சட்டமன்றத் தேர்தல்கள் முற்றிலும் மோசடி செய்யப்பட்டன. கிட்டத்தட்ட சுமார் ஐந்தாண்டு காலம் அரைபாசிச அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. எதேச்சதிகாரத்தின் இந்தக் காலம் 1975 ஜூன் 25 நள்ளிரவில் அவசர நிலைப் பிரகடனத்துடன் எவ்வித மான தங்குதடையுமின்றி இணைந்தது. அவசர நிலையின் அட்டூழியங்கள் அவசரநிலையின் பெரும்பகுதி காலத்தில், இந்திரா காந்தியின் அரசியல் எதிரிகள் சிறையில் அடைக்கப் பட்டனர்.

பத்திரிகைகள் தணிக்கைக்கு உள்ளாக் கப்பட்டன. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அவருடைய அரசியல் எதிரிகள், பத்திரிகையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். இதற்கிடையில் பாகிஸ்தானுடனான போர், வறட்சி மற்றும் 1973ஆம் ஆண்டு உலகளாவிய எண்ணெய் நெருக்கடி ஆகியவற்றிலிருந்து உருவான தொடர்ச்சியான பொருளாதார சவால்களை நாடு எதிர் கொண்டது. அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் பண வீக்கம் பொதுமக்களின் அதிருப்தியையும் அரசியல் எதிர்ப்பையும் தூண்டியது. இந்த வளர்ந்து வரும் அழுத்தங்கள், இந்திரா காந்தியின் தனிப்பட்ட பாதுகாப்பின்மை உணர்வு மற்றும் சட்ட பின்னடைவுகள், குறிப்பாக அவரது மக்களவை உறுப்பினர் பதவியை இழக்கும் அச்சுறுத்தல் ஆகியவை, அவரை அவசர நிலையை அறிவிக்கும் முடிவுக்கு இட்டுச் சென்றன.

சுருக்கமாகச் சொல்வது என்றால், 1975ஆம் ஆண்டு அவசரநிலைப் பிரகடனம், அரசியல், சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளின் கலவையால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கு அரசாங்கம் அரசமைப்புச்சட்டத்தின் 352ஆவது பிரிவைப் பயன்படுத்தியது. இது போர், வெளிப்புற ஆக்கிரமிப்பு அல்லது உள் நாட்டுக் குழப்பம் ஏற்பட்டால் அவசரநிலையை அறி விக்க அனுமதிக்கிறது. தேசியப் பாதுகாப்புக்கும், பொது ஒழுங்கிற்கும் அச்சுறுத்தல்கள் என்று அதிகா ரப்பூர்வமாக நியாயப்படு த்தப்பட்டதானது, அடிப்படை உரிமைகளைப் பறிப்பதற்கும், ஆட்சியாளர்களின் கைகளில் அதிகாரம் குவிக்கப்படுவதற்கும் வழிவகுத்தது.

**‘பலவீனத்தின் அடையாளம்’**

அவசரநிலைக்கு வழிவகுத்த அரசியல் இயக்கவி யலை அம்பலப்படுத்தி மக்களவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் குழுத் தலைவர் ஏ.கே. கோபா லன், 1975 ஜூலை 21 அன்று பேசுகையில், “கடந்த மூன்று ஆண்டுகளில் எதேச்சதிகார மற்றும் ஒரு கட்சி எதேச்சதிகாரத்தை நோக்கிய போக்கு அதிகரித்து வருவது குறித்து எங்கள் கட்சி அளித்த எச்சரிக்கை, புதிய அவசரநிலையின் திடீர் பிரகடனத்துடன் உண் மையாகிவிட்டது” என்றார்.

அவர் மேலும், “ஆளும் கட்சி தன்னையும் அதன் தலைவரையும் ஆழமடைந்து வரும் தனிப்பட்ட மற்றும் அரசியல் நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கான இந்த திடீர் நடவடிக்கை வலி மையின் அடையாளம் அல்ல மாறாக அது பல வீனத்தின் அடையாளம்” என்று கூறினார். “இது எதிர்க் கட்சியினர் குரல்களையும் மக்களின் இயக்கங்களை யும் நசுக்க வடிவமைக்கப்பட்டது. இந்த அவசரநிலை தீவிர வலதுசாரி மற்றும் இடது அதிதீவிரவாதிகளுக்கு எதிரானது” என்ற பொய்க்கதையையும் அவர் அம்பலப்படுத்தினார்.

தவிர்க்க முடியாதது தொடர்ந்தது. இந்திரா காந்தி யுடன் சேர்ந்து காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட அரசியல் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. பதினெட்டு மாத அவசரநிலைக் காலம் இந்திய அரசியல் வர லாற்றில் ஒரு பெரிய வடுவாகவும், ஜனநாயகத்தின் மோசமான சீர்குலைவாகவும் பதிவாகியுள்ளது. 1977 மக்களவைத் தேர்தலைத் தொடர்ந்து ஜனநாயகம் மீட்கப்படுவதை ஜனநாயக சக்திகளின் விரிவான கூட்டணி உறுதி செய்தது.

**மோடியின் ஏமாற்று வேலை**

இன்றையதினம், நரேந்திர மோடி அவசர கால சகாப்தத்தை நினைவு கூர்ந்து, 1975 ஜூன் 25 அன்று அது திணிக்க ப்பட்டதை “இந்திய அரசமைப்புச்சட்டத் தின் மீதான ஒரு கரும்புள்ளி” என்று வர்ணிக்கிறார்.

“அவசரநிலைக்குப் பிறகு இந்த 50 ஆண்டுகள் நமது அரசமைப்புச்சட்டத்தையும், ஜனநாயகத்தையும் பெருமையுடன் பாதுகாக்க நினைவூட்டுகின்றன. இது போன்ற ஒரு கேலிக்கூத்து மீண்டும் ஒருபோதும் நடக்க அனுமதிக்கக்கூடாது என்று நாட்டு மக்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கோடிட்டுக்காட்டியுள்ளபடி, துடிப்பான ஜன நாயகத்தை உறுதி செய்வதற்கும், சாமானிய மக்களின் கனவுகளை நிறைவேற்று வதற்கும் நாம் உறுதிபூண் டுள்ளோம்” என்று அவர் அறிவித்துள்ளார்.

எனினும், இந்த தோரணை (பிம்பம் image) ஒரு பெரிய ஏமாற்று வேலை என்பதையும், கடந்த பதினொரு ஆண்டுகளாக இந்திய ஜனநாயகத்தின் மீது ஆர்.எஸ்.எஸ்./பா.ஜ.க. பரிவாரங்கள் மேற்கொண்டுவரும் அருவருப்பான தாக்குதல்களை மூடிமறைப் பதற்கான ஒரு சூழ்ச்சி என்பதையும் நாமறிவோம்.

**அன்றும் இன்றும் ஒப்பீடு செய்ய முடியாது**

ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பிப் பார்க்கும் போது, அவசரநிலையை இந்தியாவின் ஜனநாயக அமைப்பின் மீதான முதல் பெரிய தாக்குதலாகக் காணலாம். இது குடிமைச் சுதந்திரங்கள் மற்றும் ஜன நாயக உரிமைகளை கடுமையாகக் குறைத்தது. ஆனா லும், பலர் செய்வது போல, 1975ஆம் ஆண்டின் அவசர நிலைக்கும் தற்போதைய சூழ்நிலைக்கும் இடையே நேரடி ஒப்பீடு செய்வது தவறாகும்.

மோடியின் ஆட்சி யின் கீழ் கடந்த பத்தாண்டுகள் பெரும்பாலும் “அறிவிக்கப்படாத அவசர நிலை” என்றே குறிப்பிடப்படுகின்றன. ஆயினும் அத்தகைய ஒப்பீடு பல விஷயங்க ளில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவான அரசியல் சக்திக ளின் மாறிவரும் தொடர்புகளுக்கு மத்தியில், தீவிர வலதுசாரிகளின் உலகளாவிய மறுமலர்ச்சியின் பின்னணியில் தற்போதைய சூழ்நிலை உருவாகி யுள்ளது. இந்தக் கட்டம் நிதி மூலதனத்தால் இயக்கப்படும் உலகளாவிய பொருளாதாரங்களின் சகாப்தத் திற்கு வழிவகுத்துள்ளது.

இது கூர்மையான சமத்துவ மின்மை, பரவலான வேலையின்மை மற்றும் பெரும் நிறுவன ஆதிக்கத்தால் குறிக்கப்படுகிறது. இதனுடன் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அடையாள அரசியல் முன்னுக்கு வந்திருப்பதும், மக்களுக்கி டையே இடைவிடாத வெறுப்பு பிரச்சாரமும் இடம் பெற்றுள்ளன. இது பொருளாதார மற்றும் சமூகத் துறை களில் சக குடிமக்களையே ‘அந்நியர்களாக’க் கருத வைக்கிறது.

**தற்போதைய தாக்குதல் மிகவும் நயவஞ்சகமானது**

இவ்வாறு, ஜனநாயகம் மற்றும் அரசமைப்புச் சட்டக் கொள்கைகள் மீதான தற்போதைய தாக்குதல் மிகவும் நயவஞ்சகமானது. இது நிறுவனமயமாக்கப் பட்ட எதேச்சதிகாரத்தின் எழுச்சிக்கு இட்டுச் சென்றுள் ளது. சில பார்வையாளர்கள் இதனை “தேர்தல் எதேச்ச திகாரம்” என்று அழைக்கிறார்கள்.

**இந்திய சூழலில், இந்த எதேச்சதிகார மாற்றத்தை ஆர்.எஸ்.எஸ். முன்னின்று நடத்தி வருகிறது. இந்துத் துவாவின் நச்சு சித்தாந்தத்தை மக்களின் மத்தியில் இது உட்செலுத்திக் கொண்டிருக்கிறது. காலனித் துவ எதிர்ப்புப் போராட்டத்திலிருந்து பிறந்த இந்தியா என்ற கருத்தையே இது அடிப்படையில் மாற்ற முயற்சிக்கிறது. ஜனநாயக, மதச்சார்பற்ற, சமூக நீதி மற்றும் கூட்டாட்சிக் குடியரசில் வேரூன்றியுள்ள மக்கள் கருத்தின் மீது தாக்குதல் தொடுத்துள்ளது.**

**இந்திய குடியுரி மையின் அடிப்படைக் கொள்கைகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்டு, இந்தத் தாக்குதல்கள் தற்போது மிகவும் பரவலாகவும், மூச்சுத் திணறச் செய்யக்கூடிய விதத்திலும் உள்ளது. பின்னோக்கிப் பார்க்கும்போது, இன்று நாம் எதிர்கொண்டிருக்கும் முழுமையான எதேச்சதிகா ரத்துடன் ஒப்பிடும்போது 1975 அவசரநிலை ஒரு திட்டமிடப்படாத தொழில்முறை அல்லாத ஒரு வடிவ மாக கருதலாம். தற்போதைய ஆட்சியை அகற்றுவது கடினமானது போலத் தோன்றினாலும்,**

**1970களில் அவசரநிலைக்கு எதிராகப் போராடிய அனுபவம் நமக்கு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. ஆர்.எஸ்.எஸ். இன் தீங்கு விளைவிக்கும் சித்தாந்தத்தை எதிர்த்து ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் விருப்பத்துடன் ஒன்றுபட்ட மக்கள், இந்த சவாலை எதிர்த்து வெல்ல முடியும்.**

**நன்றி ‘தீக்கதிர்’ 24.06.2025**

---

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்! பரிதி இளம் சுருதி எம்.சி. தலைமையில்! அயலக அணி சார்பில்**

# எழும்பூர் தொகுதியில் செம்மொழி நாள் : மாணவ - மாணவியருக்கு ஊக்கத் தொகை!

## அமைச்சர் கோவி.செழியன் வழங்குகிறார்! நடிகர் விஜயகுமார் சிறப்புரை!

சென்னை, ஜூன் 25 -

தி.மு.க. அயலக அணி சார்பில் சென்னை கிழக்கு மாவட்டம் - எழும்பூர் தொகுதியில் முத்தமிழறிஞரின் செம்மொழி நாள் விழா ‘கல்விக்கு உதவுதுல் கழகப் பணி! கலைஞர் போல் யார் பிறப்பார் இனி!” நிகழ்ச்சி இன்று 25.6.2025 மாலை 6 மணிக்கு இலட்சுமி மகால், புரசைவாக்கத்தில் அயலக அணி மாநில துணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , கழக அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி., கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., பகுதிச் செயலாளர்கள் சொ.வேலு எம்.சி., வி.சுதாகர், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சித்திக், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, க.நந்தீஸ்வரன், அ.நிர்மலா தேவி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., புரசை ஜி.தாமோதரன், க.வினோத், ஆர்.டி.சங்கர்நானா, எல்.சுந்தர்ராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட அயலக அணி நிர்வாகிகள் ஆர். மகேஷ், முத்து, இப்ராஹிம்ஷா, ரகிபுல்லா[எ]சகுர், சி.அஜித், க.பிரகதீஸ்வர், பா.பிரகாஷ், சையத்யேமத்துல்லா, எம்.வீரேந்தர், நந்தா, யாசர்சர்தார்மீரான், பா.அஜய், லோ.சுகுமாரன், எஸ்.எல்.நாராயணன், சுந்தர்ராஜன், விஜய்அமர்நாத், ஆ.பிரகாஷ், வி.மகேஷ்பாபு ஆகியோர் வரவேற்கின்றனர். மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் கோ.வி.செழியன், நடிகர் விஜயகுமார், ஆர். பிரியா ராஜன் , தயாநிதிமாறன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., எஸ்.மணிமுடி, கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, வே. உமாகாந்த், ப.மீ.யாழினி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

எம்.எல்.ஏ.க்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றிஅழகன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் ப.ரங்கநாதன், சங்கரிநாராயணன், பி.கே.மூர்த்தி மற்றும் எம்.விஜயகுமார், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, கவிஞர் நன்மாறன், எல்பிஎப்.வரதன், டாக்டர் எஸ். செந்தில்குமார், வழக்கறிஞர் பி.புகழ்காந்தி, வழக்கறிஞர் மனுராஜ், சண்முகசுந்தரம், திருமதி. உமாராணி, கன்னிகை ஜி. ஸ்டாலின், சேகர், ஜே.மனோகரன், விஜயன் ராமகிருஷ்ணன், முத்துவேல் ராமசாமி, குமரி எ.பாபு வினிபிரட், தேவஜவகர், ஜி.எம். தேவன், இசட், ஆசாத், ஸ்ரீராமுலு, கூ.பீ.ஜெயின், சரிதாமகேஷ்குமார், டாக்டர் சாந்தகுமாரி, கழக செயலாளர்கள் ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன் , டி.எஸ்.பி. இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினளகள் எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, லயன்பி. உதயகுமார், பி.ஜெ.துளசிலிங்கம், நீலகண்டன், சாவித்திரிவீரராகவன், எம்.இப்ராஹிம்கனி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி,

அயலக அணி மாவட்ட அமைப்பாளர்கள் ஏ.டி.மணி, சி.கோவிந்தராஜ், டி.எஸ்.ராஜா, பி.கே.ராஜேஷ் கண்ணா, நா.முகேஷ்கண்ணா,

துணை அமைப்பாளர்கள் சுதாதீனதயாளன், ஜி.வி.நாகவள்ளி, டீநா.துலுக்காணம், எல்.பி.எப். மோகன், இரா.வீரமணி, துரைகண்ணன், பி.விஜயகுமார்,

எம்.பெரோஸ்கான், எம்.விநாயகம், க.பா.பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ் முகமது, கு.கிருஷ்ணமூர்த்தி, எம். தில்லைகுமார், பி.சி.சம்பத்குமார், ஜெ.கே.கருணாகரன், கே.வள்ளி, சூளைசுப்புராயலு, எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், வட்டக் கழக செயலாளர்கள் ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், தி.தயாளன், வி.அபாய், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ். அரி, இ.மொய்தீன் , வான்மதிகதிரவன், இரா.ஜெய்சங்கர், த.செபாஸ்டின், மா.காந்தி, மு.கமலகண்ணன்,டி.கிருஷ்ணன் ,டி.கே. விஜயராஜ் ,எல்.ஐ.சி.டி.கர்ணா, மு.முரளிதரன், எஸ்.நாராயணன்,ஆர்.நித்தியராஜ், எஸ்.ராஜதுரை, து.களரிமுத்து, தனஇளங்கோ ,எஸ்.துலுக்காணம் ,மு. ஜெயகுமார் ,எம்.ரமேஷ், ஆர். ஸ்ரீதர், ம.வெற்றிவீரன், ஏ.கே.ரபிக்பேக் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் சு. மனோகர், ந.பாலு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு பொன்னேரியில் மாபெரும் செம்மொழி நாள் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் கோ.வி.செழியன், ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையற்றினார்கள். உடன் சைதை சாதிக், மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, சி.எச். சேகர், ஜி.ரவிக்குமார், பரிமளம் விஸ்வநாதன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், மு.கதிரவன், எஸ். ரமேஷ், சுப்பிரமணி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, உள்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---






## தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

**சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் அறிவிப்பு!**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 29.06.2025 | திருவொற்றியூர் மேற்குப் பகுதி | சத்தியமூர்த்தி நகர் பேருந்து நிலையம் | தமிழ்சாதிக் தி.கோகுல் |
| 2 | 30.06.2025 | திருவொற்றியூர் கிழக்குப் பகுதி | தேரடி ஈசானி மூர்த்தி கோயில் தெரு | போடி காமராஜ் ர.சந்தோஷ்ஜெய் |
| 3 | 04.07.2025 | மாதவரம் தெற்குப் பகுதி | டீச்சர்ஸ் குடியிருப்பு அருகில் | முரசொலி மூர்த்தி எஸ்.மாறன் |
| 4 | 05.07.2025 | சோழவரம் தெற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் அருகில், போஸ்ட் ஆபீஸ் தெரு, சோழவரம். | அத்திப்பட்டு சாம்ராஜ் க.சுபத்ரா |
| 5 | 06.07.2025 | திருவொற்றியூர் மத்தியப் பகுதி | அண்ணா சிலை அருகில், மணலி. | திருப்பத்தூர் ரஜினி அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 6 | 11.07.2025 | வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் | அம்பேத்கர் சிலை அருகில், பாலவேடு ஊராட்சி. | ஆடுதுறை உத்திரபதி சாய் ரித்திக் சக்திவேல் |
| 7 | 17.07.2025 | புழல் ஒன்றியம் | சென்றம்பாக்கம் | ஒப்பில்லாமணி க.ஹேமநாதன் |
| 8 | 18.07.2025 | செங்குன்றம் பேரூர் | செங்குன்றம் சந்திப்பு அருகில், தேவகி தெரு. | பசும்பான் ரவிச்சந்திரன் அ.தஸ்னீம் பானு |
| 9 | 28.07.2025 | மாதவரம் வடக்குப் பகுதி | தீயம்பாக்கம் | தக்கோலம் தேவபாலன் செ.ஜோதி |

**சென்னை**

நாள் : 24.06.2025

கலைஞர் 100 1924 - 2023

